# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102188

1. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 08/2023 Date: நாள் 10.10.2023

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 10.10.2023 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.30 hrs மற்றும் 13.30 hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.10.2023 Time : நேரம் 16.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.10.2023 Time : நேரம் 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் பேரூராட்சி அலுவலகம், மல்லாங்கிணறு சுமார் 15 கி.மீ கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.ம.இராஜன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.மனோகரன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Machine Operator (g) Address : முகவரி 1/80, சூரம்பட்டி கிராமம், மல்லாங்கிணறு பேரூராட்சி, காரியாபட்டி வட்டம், விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.மாணிக்கராஜ், பில்கலெக்டர், மல்லாங்கிணறு பேரூராட்சி, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved : Not arise
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் (கு.ராமசந்திரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்) இன்று 10.10.2023 மாலை 16.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், காரியபட்டி தாலுகா, மல்லாங்கிணறு பேரூராட்சி, சூரம்பட்டி கிராமம், கதவு எண்.1/80 என்ற முகவரியைச் சேர்ந்த திரு.மனோகரன் என்பவரின் மகன் திரு.ம.இராஜன் என்பவர் என் முன்பாக ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, மேற்படி மனுமீது இரகசிய விசாரணை செய்ததில், எதிரிமீது எதிர்மறையான குறிப்புகளும், வாதிமீது நம்பகத்தன்மையான குறிப்புகளும் இருந்தது. மேலும் வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரமும் இருந்ததால், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 10.10.2023 மாலை 18.00 மணிக்கு காலம் 7-ல் கண்ட எதிரி திரு.மாணிக்கராஜ், பில்கலெக்டர், மல்லாங்கிணறு பேரூராட்சி, விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2023 பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம்-2018)-இன்படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகார் மனு விபரம் பின்வருமாறு.

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

- FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
  மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M. Rajan
10.10.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

10.10.2023
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(K.ராமச்சந்திரன்)

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11.10.2023 at 09.45 hrs

Name: பெயர் ADSP/VAC/VNR(O).
Rank: நிலை .....................No. எண் ..........

**விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.08/2023 பிரிவு 7 of the PC Act-1988 as Amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-**

அனுப்புநர் ம.இராஜன் (33/2023), த/பெ.மனோகரன் (லேட்), கதவு எண்.1/80, சூரம்பட்டி கிராமம், மல்லாங்கிணறு பேரூராட்சி, காரியாபட்டி வட்டம், விருதுநகர் மாவட்டம். பெறுநர் லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். ஐயா, நான் மல்லாங்கிணறு பேரூராட்சிக்குட்பட்ட சூரம்பட்டி கிராமத்தில் எனது அம்மாவுடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகவில்லை. நான் ஆவியூர் அருகிலுள்ள டிவிஎஸ் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இரண்டு மூத்த சகோதரிகளும் ஒரு மூத்த சகோதரனும் உள்ளனர். அனைவருக்கும் திருமணமாகி தனித்தனியே குடியிருந்து வருகின்றனர். நான் குடியிருக்கும் கதவு எண்.1/80 என்ற வீடானது எனது அப்பா திரு.மனோகரன் பெயரில் இருந்தது. இந்த வீட்டிற்கு மல்லாங்கிணறு பேரூராட்சி வரிவிதிப்பு எண்.716-ன்படி எனது அப்பா பெயரில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. எனது அப்பா கடந்த 17.06.2017ஆம் தேதி இறந்துவிட்டார். ஆகையால் மேற்படி வீட்டை என் உடன் பிறந்தவர்களும், என் அம்மாவும் சேர்ந்து, காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3139/2023-ன்படி கடந்த 18.08.2023ஆம் தேதி தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எனது பெயருக்கு பத்திரம் பதிவு செய்து கொடுத்தார்கள். மேற்படி வீட்டிற்கு 2023-24ஆம் நிதியாண்டிற்கு என் அப்பா பெயரிலிருந்த அதே வரிவிதிப்பு எண்ணில் சொத்துவரியை கடந்த 20.09.2023ஆம் தேதி மல்லாங்கிணறு பேரூராட்சிக்கு சென்று செலுத்தினேன். பின்னர் அன்றே (20.09.2023) என் அப்பா பெயரிலுள்ள சொத்து வரியை எனது பெயருக்கு பெயர்மாற்றம் செய்து தரவேண்டி மனு ஒன்றை தயார் செய்து, அத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்களை இணைத்து, அதை மல்லாங்கிணறு பேரூராட்சி அலுவலகத்தில் கொடுத்தேன். நான் கொடுத்த மனுவின்பேரில், நான் மனு கொடுத்ததில் இருந்து ஒரு வாரம் கழித்து ஒரு நாள் நான் வீட்டிலிருந்த போது மல்லாங்கிணறு பேரூராட்சியில் பில் கலெக்டராக பணிபுரியும் திரு.மாணிக்கராஜ் என்பவர் வந்தார். அவர் வந்து எங்க வீட்டை பார்வையிட்டுவிட்டு சென்றார். சுமார் ஒரு வாரத்திற்கு மேலாகியும் எந்த தகவலும் இல்லாததால், இன்று (10.10.2023) காலை சுமார் 11.30 மணியளவில் மல்லாங்கிணறு பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்று, பில் கலெக்டர் திரு.மாணிக்கராஜ் அவர்களை சந்தித்து, எனது பெயருக்கு சொத்துவரி மாற்றம் செய்வது தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் உங்க பெயருக்கு மாற்றனும்னா கொஞ்சம் செலவாகும் தம்பி என்று கூறினார். என்ன செலவாகும் சார் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.1,000/- DD-யாக பேரூராட்சிக்கு செலுத்த வேண்டியிருக்கும் என்றும், அதுபோக தனியாக எனக்கு ரூ.1,000/- கொடுக்க வேண்டும் என்றும் கூறி, அவரிடமிருந்து DD எடுக்கக்கூடிய எஸ்பிஐ வங்கி செலான் ஒன்றை எடுத்து அவரே நிரப்பி, வங்கிக்கு சென்று DD எடுத்து வருமாறு சொல்லி அதை

என்னிடம் கொடுத்து அனுப்பினார். நான் அதை பெற்று கொண்டு நேரடியாக அங்கிருந்து மல்லாங்கிணறு எஸ்பிஐ வங்கிக்கு சென்று பில் கலெக்டர் நிரப்பி கொடுத்த வங்கி செலானை கொடுத்து ரூ.1,000/-க்கான DD-யை பெற்றேன். பின்னர் அங்கிருந்து நேராக மீண்டும் மல்லாங்கிணறு பேரூராட்சி அலுவலகத்திற்கு மதியம் சுமார் 01.30 மணியளவில் சென்று பில் கலெக்டர் திரு.மாணிக்கராஜ் அவர்களை சந்தித்து மேற்படி DD-யை அவரிடம் கொடுத்தேன். அவர் நான் கொடுத்த DD-யை பெற்று அதை என்னுடைய விண்ணப்பத்துடன் சேர்த்து வைத்து கொண்டுவிட்டு, தம்பி பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய பணத்தை DD-யா செலுத்திட்டீங்க, நான் எனக்கு தனியாக கேட்ட ரூ.1,000-த்தை மட்டும் கரெக்டா வந்து கொடுத்திடுங்க என்று கூறினார். அதற்கு நான் அவரிடம், எதுக்கு சார் உங்களுக்கு தனியா ரூ.1,000/- பணம் கொடுக்கனும் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் பொதுவாக சொத்துவரி பெயர்மாற்றம் செய்ய வர்றவுங்ககிட்ட ரூ.1500 ரூ.2000/- எனதான் கேட்டு வாங்குவேன். உங்ககிட்டதான் ரூ.1000 கேட்டிருக்கேன். அதனால நீங்க நான் கேட்ட ரூ.1000 பணத்தை என்னிடம் கொண்டுவந்து கொடுத்தால்தான் உங்க பெயருக்கு சொத்துவரி பெயர்மாற்றம் செய்ய ஏற்பாடு செய்வேன் என்று கண்டிப்புடன் சொன்னார். அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை இருந்தாலும் அப்போது அவரிடம் சரியென்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். எனது பெயருக்கு சொத்துவரி பெயர்மாற்றம் செய்ய ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் ரூ.1000 பணத்தை லஞ்சமாக கேட்ட மல்லாங்கிணறு பேரூராட்சி பில் கலெக்டராக பணிபுரியும் திரு.மாணிக்கராஜ் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd) M.Rajan 10/10/2023 Sir, Received the complaint on 10.10.2023 at 16.00hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found Prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.08/2023 u/s 7 of the PC Act-1988 as Amended in 2018 on 10.10.2023 at 18.00 hrs and took up for Investigation. (Sd) K.Ramachandran, 10.10.2023, ADSP/V&AC/VNR (OD).

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble CJM / Special Judge for PC Act cases, Virudhunagar at Srivilliputhur and the copies submitted to the concerned officers.

10.10.2023

ADSP/V&AC/VNR(OD).